# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2115/6 - 2019 මාර්තු මස 18 වැනි සඳුදා - 2019.03.18

*2115/6 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 18 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/ 78* (xv)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவூப் ஹக்கீம் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, (2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதிய 2079/13 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறானதும்) 1995 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 07 ஆந் திகதிய 896/ 2 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், இலங்கை ரஜரட்டைப் பல்கலைக்கழகத்தின் பீடங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதும் சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின்* I *ஆம் நிரலில் காணப்படுகின்ற "சமூக விஞ்ஞானம் மற்றும் மானிடவியல் பீடம்" என்னும் விடயத்துக்கு நேரொத்ததாகவுள்ள அவ்வட்டவணையின்* II *ஆம் நிரலிலுள்ள காணப்படுகின்ற "6. ஆங்கில மொழி கற்பித்தல் துறை" என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் பதிவைச் சேர்ப்பதன் மூலம் திருத்துகின்றேன்.*

"7. பொருளியல் துறை".

ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும்
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2019, மாச்சு 06.*

*04-05*


1A - PG 4434 — 518 (2019/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.